**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST(POA) ACT,COIMBATORE.

Spl.S.C.No.98 of 2023

Prosecution witness - 3

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-3 முருகன் | Caste | |
| Father / Husband Name | பாரவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2024.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, வத்தலக்குண்டு, பெதனியா தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர். அ.சா.1 என்னுடைய உடன்பிறந்த மூத்த சகோதரி ஆவார். அ.சா.2, அ.சா.1ன் கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி இறந்து போன என்னுடைய தங்கை பரமேஸ்வரியின் கணவர் ஆவார். என் தகப்பனார் பெயர் பாரவேல், என்னுடன் பிறந்தவர்கள் 3 பேர். அ.சா.1 ஜோதி, சுமதி ஆகியோர் என்னுடன் பிறந்த மூத்த சகோதரிகள் ஆவர். இறந்து போன பரமேஸ்வரி தங்கை ஆவார். என் தங்கை பரமேஸ்வரி SMP மில்லில் வேலை செய்து வந்தார். அப்போது கொடைக்கானல் மன்னவனூரை சேர்ந்த சிவமுருகனுக்கும், எனது தங்கை பரமேஸ்வரிக்கும் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு ஒரு மாதம் எங்கள் வீட்டில் தங்கி வசித்து வந்தார்கள். அதன்பிறகு கோயமுத்தூரில் சிவமுருகனின் நண்பர் ஆனந்தராஜ் என்பவர் தொலைபேசி மூலம் சிவமுருகனை வரவழைத்து கருமத்தம்பட்டி அருகிலுள்ள கௌரிசங்கர் ஹோட்டலில் வேலை வாங்கி தருவதாக சொல்லி வரவழைத்தார். அதன்பிறகு எனது தங்கை பரமேஸ்வரியும், அவரது கணவர்

சிவமுருகனும் வேலைக்காக கோவை கருமத்தம்பட்டி அருகிலுள்ள ஹோட்டலுக்கு சென்று வேலை செய்து வந்து, அங்கு தனி வீடு எடுத்து இருவரும் வசித்து வந்தனர். அங்கு சென்றபிறகு எனது தங்கை பரமேஸ்வரி வாரம் இரண்டு முறை என் அக்கா அ.சா.1 க்கும், எனக்கும் தொலைபேசியில் அடிக்கடி பேசுவார். நாங்களும் நலம் விசாரிப்போம். அதன்பிறகு எனது தங்கை ஒரு நாள் அ.சா.1 க்கு போன் செய்து தான் கர்ப்பமாக இருக்கிறேன் என்று தகவல் சொன்னதாகவும், அதற்கு அ.சா.1 பார்த்து பத்திரமாக இரு என்று கூறியதாகவும் என்னிடம் அ.சா.1 கூறினார். 16.08.2017 அன்று ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து உன் தங்கை பரமேஸ்வரி பைக்கிலிருந்து கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தகவல் என்னிடம் சொன்னார். அதனை நான் உடனடியாக அ.சா.1 க்கும, என் அம்மாவுக்கும் போன் மூலம் தகவல் தெரிவித்தேன். உடனடியாக நானும், அ.சா.1 ம், அ.சா.2, என் தாயார், என்னுடைய இன்னொரு மூத்த சகோதரி சுமதி, மற்றும் உறவினர்கள் அனைவரும் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கு சென்று பார்த்தபோது எனது தங்கை பரமேஸ்வரி இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். நாங்கள் விசாரித்தபோது எனது தங்கை பரமேஸ்வரி பைக்கில் இருந்து கீழே விழுந்து அடிபட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக 17.08.2017 அன்று சூலூர் காவல் நிலையத்தில் எழுத்து மூலமான புகார் ஒன்றை அ.சா.1 கொடுத்தார். அதனடிப்படையில் நாங்கள் பிரேதத்தை பெற்றுக் கொண்டு வத்தலகுண்டிற்கு கொண்டு சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக தோன்றுவதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது-**

எனது தங்கை பரமேஸ்வரியின் கணவர் சிவமுருகனின் பெற்றோர்கள் நாங்கள் இந்து பறையர் வகுப்பை சார்ந்தவர்கள் என்று தெரிந்து திருமணம் செய்து கொண்டதில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை. அதனால் குழந்தை வேண்டாம் என்று கூறினார்கள் மற்றும் கர்ப்பம் சமயத்தில் என் தங்கை பரமேஸ்வரியின் கணவர் மாத்திரை கொடுத்து கருவை கலைத்துவிட்டார் என்றும், எனது தங்கை பரமேஸ்வரி

என்னிடம் சொல்லி அழுதார் என்றும், எனது தங்கை பரமேஸ்வரியின் கணவர் சிவமுருகனுக்கு வேறு பெண் பார்க்கிறார்கள் என்று அவரது பெற்றோர்கள் கூறினார்கள் என்றும், ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் அடிக்கடி சாதி பெயரை சொல்லி திட்டி, அவமானப்படுத்துவார்கள் என்று என் தங்கை பரமேஸ்வரி என்னிடம் போன் மூலம் தகவல் தெரிவித்தார் என்றும், நாங்கள் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தபோது என் தங்கை பரமேஸ்வரி கை, கால் போன்ற இடங்களில் இரத்த காயத்துடன் பிணமாக இறந்த நிலையில் கிடந்தார் என்றும், ஆகவே என் தங்கை பரமேஸ்வரி இறப்பில் சந்தேகம் இருக்கிறது என்றும், அதனால் ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் சாதி வித்தியாசம் பார்த்து என் தங்கை பரமேஸ்வரியின் இறப்பில் மர்மத்தை ஏற்படுத்தி உள்ளனர் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு, எதிரி அரசியல், பொருளாதார செல்வாக்குடன் இருப்பதால் உண்மை சம்பவங்களை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை - இல்லை.**

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

(ஒம்) ஆர். நந்தினி தேவி, M.L.,DPM.,
அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்,
பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல்
பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள்
தடுப்பு சட்டம், கோயமுத்தூர்.

23/04/2024